பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
14 03 2026 SATURDAY 12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. எல்லைப்பகுதிகளில் உள்ள கிராமங்களின் மேம்பாட்டிற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாடுமுழுவதும் பெட்ரோலியப் பொருட்களின் விநியோகம் சீராக உள்ளதாக மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

3. விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டம், வளர்ச்சிக்கு கூடுதல் உத்வேகம் அளிக்கும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

4. மணிப்பூரில் 4 தீவிரவாதிகளை பாதுகாப்பு படையினர் கைது செய்துள்ளனர்.

5. உலக பாரா கிராண்ட்ஃப்ரீ தடகள சாம்பியன் போட்டியில், இந்தியா 75 தங்கம், 69 வெள்ளி, 64 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>>>><<<<<<<

எல்லைப் பகுதிகளில் உள்ள கிராமங்களின் மேம்பாட்டிற்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அஸ்ஸாமின் Silchar-ல் 23 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை இன்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இன்று தொடங்கி வைக்கப்பட்ட திட்டங்கள் மூலம், இளைஞர்களுக்கு எண்ணற்ற வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

வடகிழக்கு மாநிலங்களின் மேம்பாட்டில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது வடகிழக்கு மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

வளர்ச்சியின் பலன்கள் அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்பதை தாரக மந்திரமாக கொண்டு பிஜேபி தலைமையிலான மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதிலும் மத்திய அரசு தனிகவனம் செலுத்தி வருவதாக பிரதமர் கூறினார்.

மேற்காசியாவில் தற்போது நிலவும் பதற்றமான சூழ்நிலை காரணமாக மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக்கூடாது என்பதை உறுதி செய்வதற்காக தமது அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இருப்பினும், இந்த விவகாரத்திலும் கூட, அரசியல் லாபத்திற்காக காங்கிரஸ் வதந்திகளை பரப்புவதாக அவர் குறை கூறினார்.

பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக செயல்பட காங்கிரஸ் தவறிவிட்டதாகவும் திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டினார்.

>>>>>>><<<<<<<

பஞ்சாபில் மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்புவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், தற்போதுள்ள ஆம் ஆத்மி அரசு, போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த தவறிவிட்டதாக குற்றம் சாட்டியுள்ளார்.

பஞ்சாபில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

ஆம் ஆத்மி அரசுக்கு எதிராக பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டம், வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த திட்டத்தின் கீழ் 22-வது தவணைத் தொகையை பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று விடுவித்த தை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்மூலம் 9 கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைந்துள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த திட்டம், தங்களுக்கு பெரிதும் உதவிகரமாக உள்ளது என்று தமிழகத்தின் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - விவசாயிகள் 65 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

பல்வேறு நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள், முதலீட்டுக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாக தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, தொழில் புரிவதற்கு உகந்த சூழ்நிலை உறுதி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இதன் காரணமாக, முதலீட்டுக்கு உகந்த நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாகவும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

சிறுபான்மையினரின் நலன்களை பாதுகாப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், சிறுபான்மையினர் நலனுக்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை பட்டியலிட்டுள்ளார்.

>>>>>>><<<<<<<

நாடுமுழுவதும் பெட்ரோலிய பொருட்களின் விநியோகம் சீராக உள்ளதாக மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் இதுகுறித்து அச்சம் கொள்ளத்தேவையில்லை என்று பெட்ரோலியத் துறையின் செய்திக்குறிப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

சமையல் எரிவாயு சிலிண்டருக்காக தேவையில்லாமல் முன்பதிவு செய்ய வேண்டாம் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

முன்பதிவு செய்த 3 நாட்களுக்குள் சிலிண்டர் விநியோகம் செய்யப்படுவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, நாடுமுழுவதும் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட பெட்ரோல் நிரப்பும் மையங்கள் வழக்கமாக செயல்பட்டு வருவதாக எண்ணெய் நிறுவனங்கள் கூறியுள்ளன. இதுதொடர்பான காணொலிகளையும் அந்நிறுவனங்கள் சமூகவலைதளத்தில் பகிர்ந்துள்ளன.

பொதுமக்கள் வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் எண்ணெய் நிறுவனங்கள் கேட்டுக் கொண்டுள்ளன.

பெட்ரோல் எவ்வித சிரமமும் இன்றி கிடைப்பதாக சென்னையைச் சேர்ந்த பொதுமக்கள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பொதுமக்கள் 24 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

சமையல் எரிவாயு தொடர்பாக எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு வதந்திகளை பரப்புவதாக உத்தரபிரதேச துணை முதலமைச்சர் திரு. Keshav Prasad Maurya குற்றம் சாட்டியுள்ளார்.

பிரயாக்ராஜில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சர்வதேச விவகாரங்களில் கூட காங்கிரஸ் மற்றும் சமாஜ்வாதி கட்சிகள் அரசியல் புரிவது துரதிருஷ்டவசமானது என்று குறிப்பிட்டார்.

எந்வொரு சவாலையும் எதிர்கொள்ளும் திறன் நம் நாட்டிற்கு உள்ளது என்றும் அவர் கூறினார்.

மாநிலத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம் சீராக உள்ளதாகவும் திரு. Keshav Prasad Maurya தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

மணிப்பூரில் நான்கு தீவிரவாதிகளை பாதுகாப்பு படையினர் கைது செய்துள்ளனர்.

கிழக்கு இம்பால் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் பாதுகாப்பு படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த போது, இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும், அவர்களிடமிருந்து ஏராளமான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அப்பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

>>>>>>><<<<<<<

பீகார் ஆளுநராக லெப்டினென்ட் ஜென்ரல் Syed Alta Hasmain இன்று பதவியேற்றுக் கொண்டார்.

பாட்னாவில் உள்ள மக்கள் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பாட்னா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. Sangam Kumar Sahoo அவருக்கு பதவிப்பிரமானம் செய்து வைத்தார்.

>>>>>>><<<<<<<

மேகாலயாவில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு நாளை காலை வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேற்கு Garo வன மாவட்டத்தில் இந்த கட்டுப்பாடு செயல்பாட்டில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று பிற்பகல் 3 மணிவரை அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கு தளர்வு அளிக்கப்பட்டுள்ளதாகவும் மேகாலயா அரசு தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

ஐ.நா பொதுச்செயலாளரை தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகள் அடுத்த மாதம் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 5 பேரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக ஐ.நா-வின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சிலியின் முன்னாள் அதிபர் திருமதி. Michelle Bachelet, கோஸ்ட்டாரிக்கா சார்பில் அந்நாட்டு துணை அதிபர் திருமதி. Revecca Grynsban, அர்ஜென்டினாவைச் சேர்ந்த திருமதி. Virginia Gamva, செனகல் முன்னாள் அதிபர் திரு. Macky Sall ஆகியோரின் பெயர்கள் இதற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அர்ஜென்டினாவின் சார்பில் திரு. Rafael Grossi பெயரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக கியூபா அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, கியூபா அதிபர் திரு. Miguel Diaz Canel தொலைக்காட்சி வாயிலாக அந்நாட்டு மக்களிடையே உரையாற்றுகையில் இதனை உறுதி செய்துள்ளார்.

இருதரப்புக்கும் இடையேயான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் இந்தப் பேச்சுகள் நடைபெற்றதாகவும் அவர் கூறியுள்ளார்.

c/o இதன்மூலம் பரஸ்பரம் மக்கள் பயனடைவார்கள் என்றும் திரு. Miguel Diaz Canel தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

உலக பாரா கிராண்ட்ஃப்ரீ தடகள சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Preethi Pal தங்கப்பதக்கம் வென்றார்.

புதுதில்லியில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 200 மீட்டர் ஒட்டப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா 75 தங்கம், 69 வெள்ளி, 64 வெண்கலப்பதக்கங்களை வென்று, பதக்கப்பட்டியலில் முதலிடத்தை பிடித்தது.

>>>>>>><<<<<<<

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் லோகேஷ் சத்யநாதன் தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் நீளம் தாண்டுதல் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>>><<<<<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான உலக Futures கோப்பைக்கான குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் Ambekar Meetei Lairenlakpam, Joysree Devi Chirom, Chandrika Bhoreshi, Gunjan மற்றும் Radhamani Longjam அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டங்களில் இவர்கள் வெற்றிபெற்றனர்.

>>>>>>>END<<<<<<<